# <u>OS.No.345/2023, Dated 03.02.2026</u>

The witness sworn under Oaths Act 1969 on this the 3rd day of February 2026.

**வா.சா.1 – அண்ணாமலை த/பெ. சித்தாத்தூரான் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சொத்து விபரத்தில் வந்தவாசி வட்டம் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சொத்து விவரத்தில் அந்த சொத்து மனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து விவரத்தில் நீள அகல அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கோதண்டராமனுக்கு அந்த சொத்தை அரசாங்கம் வீடாகதான் கொடுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் போலியாக தயாரிக்கப்பட்டது என்பதால் தான் சொத்து விவரங்கள் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நம்பிக்கையின் பேரில் தான் அந்த ஆவணம் எழுதப்பட்டது. அந்த ஆவணம் என்னால் பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சொத்தின் உரிமையாளர் கோதண்டராமன் இறந்துவிட்டதால் அவரது சொத்தை அபகரிக்கும் நோக்குடன் கிரைய உடன்படிக்கையை நான் பொய்யாக தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனவே இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.02.03 18:52:50 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி